**O.S.No.254/2009**

**Date:05.01.2019**

**வாதி தரப்பு சாட்சி 1 - கருணாநிதி, த-பெ. பிச்சைராமன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**11 மற்றும் 12 தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நீதிமன்ற ஆணையர் எந்த தேதியில் தாவா இடத்தை அளவிட்டார் என்றால் 26.06.2010 ஆகும். வாதிகள் 5 பேரும் தளத்தில் அப்போது இருந்தோம் என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் யார் இருந்தார்கள் என்றால் 8ம் பிரதிவாதியும் வழக்கறிஞரும் மற்றும் மூன்று பிரதிவாதிகள் இருந்தார்கள். 11, 12 பிரதிவாதிகள் இருந்தார்களா என்றால் அவர்கள் வரவில்லை. அவர்களது வழக்கறிஞர் இருந்தார். நீதிமன்ற சான்றாவணம் சி1 முதல் சி3 வரை ஆவணத்தை படித்துப் பார்த்துதான் குறியீடு செய்தோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் ஆணையர் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுத்ததாக எந்தவித தகவலும் இல்லை என்றால் பிரதிவாதிகள் என்று இல்லை ஆனால் வழக்கு தரப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்று உள்ளது. அதற்கான அறிவிப்பு கொடுத்ததற்கான குறிப்பாணை எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி ஆணையர் அறிக்கையில் தாவாச் சொத்து கிரையம் வாங்கிய போது கிரையப் பத்திரத்தில் உள்ள சர்வே எண் 158 என்பது தான் தற்போது சர்வே எண் 16 மற்றும் 17 ஆக மாற்றப்பட்டுள்ளது என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் முதலில் தாக்கல் செய்த போது தாவா இடத்தை ஆணையர் பார்வையிட்டதது பற்றி சொல்லியிருக்கிறேனா எனற்ால் சொல்லவில்லை. குறிப்பாக 11 மற்றும் 12 பிரதிவாதிகளுக்கு ஆணையர் அறிவிப்பு கொடுக்காமல் ஆணையர் அறிக்கை தயார் செய்த காரணத்தால இந்த ஆவணம் ஏற்றுக் கொள்ளாதது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் முதலில் தாக்கல் செய்திருந்தால் அதிலுள்ள குறைபாடுகள் தெரியவரும் என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்களது தரப்பில் நீதிமன்ற ஆணையரையோ சர்வேயரையோ விசாரிக்கவீல்லை என்றால் விசாரிக்கவில்லை. அவர்களை விசாரித்தால் எங்கள் தரப்பில் உள்ள தவறுகள் தெரியவரும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(13ம் பிரதிவாதி அழைத்தும் ஆஜரில்லை, வழக்கறிஞர் ஆஜரில்லை, குறுக்கு விசாரணை இல்லை)